
சமரசம் சுயமரியாதை!

விலை ரூ.2



தலைவர் கலைஞர்

(சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.லட்சுமணன் அவர்கள் தலைமையில் 18.3.95 அன்று கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மணவழகர் மன்ற விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய இலக்கியப் பேருரை)

மணவழகர் மன்றத்தின் சார்பில் நடைபெறுகின்ற இந்த இனிய நிகழ்ச்சியில் விழாத் தலைவர் நீதியரசர் லட்சுமணன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, பலமுறை நான் கலந்து கொண்டிருக்கிறேன் என்றாலும் இன்றைக்கு கலந்து கொள்வதிலும் எனக்கு ஒரு தனிச் சிறப்பு இருப்பதாகவே கருதி ஒரு தனிப் பெருமையும் இருப்பதாகக் கருதி இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கின்றேன். நான் கலந்து கொள்வதால் விழாவுக்குப் பெருமை என்று செயல்ளரும், வரவேற்புரையாற்றியவரும், தலைமையுரையாற்றிய நீதியரசர் லட்சுமணன் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மணவழகர் மன்ற விழாவில் கலந்து கொள்வதால் என் போன்றவர்களுக் குத்தான் பெருமையே தவிர (பலத்த கைதட்டல்) மணவழகர் மன்றத்திற்கு பெருமையென்று நான் இறுமாப்பு கொள்ள விரும்பவில்லை.

இங்கே முனைவர் நன்னன் எடுத்துக்காட்டியதைப்போல மறைமலை யடிகள் என்றால் தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்கின்ற அளவுக்கு மணவழகர் என்றால் இன்னமும் புரிந்துகொள்ள இயல்ாத நிலைமை தமிழகத்தில் இருக்கிறதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏனெனில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. என்ற பெயரேதான் பரவலாகப் பேசப்பட்டு செல் வாக்குப் பெற்ற பெயராக விளங்கி வளர்ந்து, உயர்ந்து, பல்வகை சிறப்புக்களும் எய்திய பெயராக அமைந்துவிட்ட காரணத்தினால் அவர் தமிழுக்காக ஆற்றிய தொண்டினை நினைந்து போற்றிட கல்யாணசுந்தரனார் என்பதை மணவழகர் என்று நாம் மாற்றியிருந்தாலும்கூட, ஏறத்தாழ நாற்பதாண்டு காலமாக இந்தப் பெயரில் இந்த மன்றம் விளங்கினாலும் கூட இன்னும் பலருக்கு மணவழகர் என்றால் திரு.வி.க.தான் என்ற நினைவு வருவதில்லை என்பதை சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகும்.

இங்கே பேசிய விழாத் தலைவர் நீதிபதி லட்சுமணன் அவர்கள் சொல்லக் கூடும். அழைப்பிதழில் மணவழகர் மன்றம் என்று இருந்தாலும், திரு.வி.க. அவர்களின் உருவப்படம் அதிலே பதிக்கப்பட்டிருக்கிறதே; அதைப்பார்த்து புரிந்துகொள்ளமாட்டார்களா? என்று அவர் கேட்கக்கூடும். இந்தக் காலத்தில் இந்த நாட்டு மக்களுக்கு திரு.வி.க. திருவுருவப் படமா நினைவில் இருக்கும். (கைதட்டல்) அவர் தமிழாய்ந்த தமிழ் மகனாயிற்றே! அதைவிட எத்தனையோ படங்கள் நினைவில் இருக்கின்ற வருந்தத்தக்க இந்தக் காலகட்டத்தில் நான் இந்த விழாவில் நீதிபதி அவர்களிடம் இந்த மன்றத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றிருக்கிறவர் என்ற நிலையில் இந்த வேண்டுகோளை வைக்கிறேன்.

1

இனி மணவழகர் மன்றம் என்ற இந்தப் பெயரைத் தாங்கி நிகழ்ச்சிகள் நடைபெறும்போதெல்லாம் அடைப்புக்குறிக்குள்ளே "திரு.வி.க." என்ற அந்தப் பெயரையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் கேட்டுக் கொள்வதற்கு பயன் இருக்குமென்று நம்பு கின்றேன். ஏனென்றால் அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆணையிடுகின்ற காலத்தில், அப்படி இல்லாதவன் கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும். எனவே கேட்டுக் கொள்கின்றேன்.

32027 க 894.5115 தெ

திரு.வி.க. அவர்கள் தமிழ்த் தென்றலாக விளங்கியவர். எப்படி மறைமலையடிகளார் தமிழுக்கு, தமிழர்க்கு, தமிழர் உரிமைக்கு தனித் தமிழ் இயக்கத்திற்குத் தொண்டாற்றினாரோ; அவரொப்ப திரு.வி.க. அவர்களும் தொண்டாற்றியிருக்கின்றார்கள். அவர்களிடத்திலே நீண்டகாலப் பழக்கம் கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்கு கிட்டாவிட்டாலும், இராயப்பேட்டை யில் அவர்கள் குடியிருந்த இல்லம், அவர் வாழ்ந்த வீடு – மறைந்த என்னுடைய நீண்பர் கண்ணதாசனுடைய இல்லத்திற்கு எதிரிலே இருந்த காரணத்தினால் கண்ணதாசனை சந்திக்கச் செல்கிற நேரத்திலெல்லாம் திரு.வி.க. அவர்களை சந்திக்கின்ற வாய்ப்பினை நான் பலமுறை பெற்றிருக்கின்றேன்.

இன்னமும் திரு.வி.க. அவர்கள் கடலூரில் நடைபெற்ற திராவிடர் இயக்க மாநாட்டில், ஆற்றிய உரை, அதிலே மும்முறை ஒலித்த முழக்கம் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அது என்ன முழக்கம் என்பதை இன்றுள்ள அரசியல் சூழலில் நான் இந்த மன்றத்தில் வெளியிட விரும்ப வில்லை. மிக வேகமாக தந்தை பெரியார் அவர்களை தொடக்க காலத்தில் எதிர்த்து மாற்றுக் கருத்துக்களை கூறிக்கொண்டிருந்த திரு.வி.க. அவர்கள் மெல்ல மெல்ல பெரியார், அண்ணா இவர்களுடைய கருத்துக்களை ஏற்று, கடலூரில் நடைபெற்ற அந்த மாநாட்டில் இந்தக் கருத்துக்கள்தான் தமிழர்களுக்கு உகந்த கருத்துக்கள் என்று எடுத்துக் கூறிய அந்த நிகழ்ச்சி என்னுடைய நெஞ்சத்தை விட்டு என்றுமே, நான் மறையும் வரையில் மறையாத நிகழ்ச்சியாகும்.

அத்தகைய பெருந்தகையாளர், பெருந்தமிழர் திரு.வி.க. அவர்களுடைய பெயரால் அமைந்துள்ள இந்த மணவழகர் மன்றத்தில் இன்று இரண்டு அருமையான சொற்பொழிவுகளை நாம் கேட்டிருக்கிறோம். ஒன்று, நம்முடைய மதுரை ஞானசம்மந்தன் அவர்கள் ஆற்றிய 'இலக்கியத்தில் நகைச்சுவை' என்ற தலைப்பமைந்த சொற்பொழிவு. அவருடைய சொற்பொழிவைக் கேட்கும்பொழுதெல்லாம், எனக்கு அண்ணன் சி.பி.சிற்றரசினுடைய நினைவுதான் வருகிறது. சி.பி.சிற்றரசு அவர்கள் ஒரு மண்டபக்கூட்டத்தில் அல்லது மாநாட்டில் பேசினால் அவர் பேசத் தொடங்கியது முதல் பேச்சை நிறைவு செய்கின்ற வரையில் கையொலியும், நகையொலியும் அந்தப் பெருங்கூட்டத்திலே கேட்டுக்கொண்டே இருக்கும்.

அதைப்போல ஒரு சிற்றரசாக, இந்த இயக்கத்திற்கு கிடைத்திருக் கிறாரோ இல்லையோ; இந்த இயக்கத்திற்கு என்று நான் அடையாளம்

காட்ட விரும்பவில்லை. தமிழியக்கத்திற்கு ஒரு சிற்றரசு கிடைத்திருக்கிறார் என்று நான் நம்முடைய ஞானசம்மந்தன் அவர்களை பாராட்ட, வாழ்த்த கடமைப் பட்டிருக்கின்றேன்.

'மண்ணும் வளமும்' என்ற தலைப்பில் நம்முடைய முனைவர் நன்னன் அவர்கள் உரையாற்றினார்கள். அவருக்கு தலைப்பை மாற்றிக் கொடுத்திருக்கலாம். 'மண்ணும் வளமும்' என்பதற்கு பதிலாக 'மண்ணும் களமும்' என்ற தலைப்பு கொடுத்திருந்தால் அவருடைய பேச்சு நூற்றுக்கு நூறு பொருத்தமாக இருந்திருக்கும் என்று நான் நம்புகின்றேன். அத்தகைய ஒரு வீரஉரையை இங்கே அவர் ஆற்றியிருக்கிறார். நன்னனுடைய சொற்பொழிவை பல நேரங்களில் நான் கேட்டிருக்கிறேன். நீங்களும் தொலைக்காட்சியிலே அவர் பாடம் சொல்கின்ற முறையை கேட்டிருக் கின்றீர்கள். ஆனால் இதுநாள் வரையில் நான் கேட்ட நன்னனுடைய சொற்பொழிவுகள் தொலைக்காட்சியிலே பாடம் சொல்கின்ற முறையில் மக்களுடைய மனதில் பதியவைக்கக்கூடிய கருத்துக்களை, பதிய வைக்கக் கூடிய பாங்கோடு பதிய வைப்பதைத்தான் நான் கேட்டிருக்கிறேன். பார்த்திருக்கிறேன்.

ஆனால் இன்றைக்கு அவரே கட்டுப்படுத்த முடியாத ஒரு வேகம் அவருக்கு ஏற்பட்டு சில நேரங்களில் மறைந்த தளபதி அழகிரிசாமியைப் போல அறைகூவல் விடுத்து இந்த மண்ணுக்கு ஏற்பட்டுவிட்ட பேராபத்தை விளக்கி இந்த மண்ணை எப்படி தூய்மைப்படுத்துவதென்றெல்லாம் தன்னுடைய கவலை தோய்ந்த வார்த்தைகளால் கருத்துக்களை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்றார்.

எனக்குத் தரப்பட்டுள்ள தலைப்பு "சொல்லும் செயலும்" என்பதாகும். இந்த சொல், செயல் என்ற இரு வார்த்தைகளை எண்ணும்போது சொல் என்பதற்கு தொல்காப்பியனார் ஒரு அதிகாரமே எழுதியிருக்கிறார். தொல்காப்பியத்திலே எழுத்து அதிகாரம், பொருளதிகாரம், அவைகளுக் கிடையே சொல்லதிகாரம் என்ற மூன்று அதிகாரங்கள் உண்டு. இங்கே ஞான சம்மந்தன் பேசும்போது "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்று குறிப்பிட்டார். தொல்காப்பியர் காலத்தில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன. இந்தக் காலத்தில் எல்லாச் சொல்லும் "பொருள் குறித்தன" என்ற அளவுக்கு (பலத்த கைதட்டல்) ஆகியிருப்பதை மறந்து விடுவதற்கில்லை.

சொற்கள் என்கின்ற மலர்கள் இருந்தால்தான் மொழி என்ற மாலையே உருவாகும். தமிழ் என்றோ, ஆங்கிலம் என்றோ, இந்தி என்றோ, வங்க மொழி என்றோ திடீரென்று ஒரு மொழி உருவாகிவிடுவதில்லை. சொல் பிறந்து சொற்களாகி அந்தச் சொற்களின் கூட்டம்தான் மொழியாக மாறுகிறது. அப்படி மாறிய மொழிகளில் பன்னெடு நாட்களுக்கு முன் நமக்கு வாய்ப்பாகக் கிடைத்த மொழிதான் தமிழ் மொழியாகும்.

அந்தத் தமிழ் மொழியில் இன்றைக்கு 'சொல்லும் செயலும்' என்ற

தலைப்பில் நான் பேசும்போது சொல் என்றால் என்ன? அந்தச் சொல் உயர்திணைக்கு எப்படி அஃறிணைக்கு எப்படி என்றெல்லாம் பயன் படுகிறதென்ற கருத்துக்களை எடுத்துக் கூறி இலக்கிய, இலக்கணப் புலவர்கள் அமர்ந்திருக்கின்ற ஒரு கூட்டத்தில் பேசுவதைப் போன்ற ஒரு பேச்சை நான் இங்கே நிகழ்த்த விரும்பவில்லை. என்னுடைய தலைப்பும் அதுவல்ல. சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள தொடர்புகள் குறித்ததுதான் என்னுடைய தலைப்பாகும்.

சாக்ரடீஸ் "உன் சொற்களைக் கொண்டு உன் உணர்ச்சிகள் மதிக்கப்படும். உன் உணர்ச்சிகளைக்கொண்டே உன் செயல்கள் மதிக்கப்படும். உன் செயல்களைக் கொண்டே உன் வாழ்க்கை மதிக்கப்படும்" என்று சொன்னார். எனவே ஒரு மனிதனுடைய வாழ்க்கையை உரைத்துப் பார்க்கும் உரை கல்லாகவே சொல்லும் செயலும் விளங்குகின்றன என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

வள்ளுவர் - சொல் பற்றியும், செயல் பற்றியும் பல குறட்பாக்களை நமக்கு வழங்கியிருக்கிறார். அந்தச் சொல் எப்படி இருக்க வேண்டு மென்பதை அவர் விளக்குகிற நேரத்தில்

"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல், அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து"

"ஒரு சொல்லை நீ சொல்வதானால் வேறொரு சொல் அந்தச் சொல்லை வெல்லக்கூடிய சொல்லாக இல்லை என்ற நிலைமை அறிந்து ஒரு சொல்லைச் சொல்" என்றார் வள்ளுவர்.

அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல வேண்டுமே யானால், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக சட்டமன்றத்தில் வீற்றிருந்தபோது எதிர்க் கட்சி உறுப்பினர் வினாயகம் எழுந்து அண்ணாவைப் பார்த்து ஆங்கிலத்திலே "Your days are Numbered" என்று சொன்னார். அதற்கு அண்ணா உடனே எழுந்து "My steps are Measured" என்று சொன்னார். "உம்முடைய நாட்கள் எண்ணப்படுகின்றன" என்று வினாயகம் சொன்னபோது, அதற்கு அண்ணா "என்னுடைய அடிகள் அளந்து வைக்கப்படுகின்றன" என்று சொன்னார். அந்தச் சொல்லை வெல்லும் சொல் கிடையாது. இதைத்தான் வள்ளுவர் "நீ சொல்லுகின்ற சொல்லை வெல்லும் சொல் பிறிதோர் சொல் இல்லை" என்ற அளவிற்கு அந்தச் சொல்லை கையாள வேண்டுமென்று சொன்னர்ர். அப்படி சொல்லைக் கையாண்டவர் பேரறிஞர் அண்ணா ஆவார்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

இங்கேதான் சொல்லும் செயலும் வருகிறது. சொல்லுவது எளிது; ஆனால் சொல்லியவண்ணம் செய்வதுதான் அரிது என்றார் வள்ளுவர்.

இங்கே ஞானசம்மந்தன் அவர்கள் சொன்னதைப்போல நகைச்சுவைக் கதையாக ஒன்றை சொல்ல வேண்டுமேயானால் ஒரு மன்னனுடைய கொலு மண்டபத்திலே ஒருவன் "இந்த ஊரிலே இருக்கின்ற பெரிய மலையை நான் என்னுடைய தலையிலே தூக்குவேன்" என்று அறைகூவல் விடுத்தான். உடனே மன்னன் "அப்படியா! அப்படித் தூக்கினால் உனக்கு நாட்டிலே பாதியை எழுதி வைப்பேன்" என்றான். போட்டி ஆரம்பமாயிற்று. அறைகூவல் விடுத்தவன் ஒரு கிழமை எனக்கு தவணை தாருங்கள் என்றான். ஒரு கிழமைக்குப் பிறகு வந்தான். மன்னனும் பிரதானிகளும், போட்டியாளனும் மலையோரம் சென்றார்கள். "எங்கே மலையை தூக்கு" என்றார்கள். "நான் தூக்கத் தயார். எல்லோரும் சேர்ந்து அதைத் தூக்கி என் தலையில் வையுங்கள். நான் தூக்கிக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னான்.

வரலாற்று ரீதியாகப் பார்த்தால் சொல்லியவண்ணம் செயல் என்ற குறளுக்கு ஏற்ப நடந்துகொண்ட மாவீரன் சேரன் செங்குட்டுவன். அரிய செயல் என்றாலும்கூட அதை செய்து முடித்தவன் சேரன் செங்குட்டுவன். வடபுலத்தில் கனக, விஜயன் என்ற இரண்டு மன்னர்கள். "தமிழ்நாட்டு மன்னர்கள் வந்து இமயத்திலே கொடியை நாட்டினார்களாமே; அவர்கள் வந்தபோது எம்போன்ற மன்னர்கள் இங்கு இல்லாத காரணத்தால் அவர்கள் கொடியை நாட்டியிருக்க முடியும்" என்று அவர்கள் கூறினராம்.

காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்முடன்கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலராகி
இமயத்தில் தமிழ் மன்னர் கொடி பொறித்தபோது
எம்போலும் மன்னர் ஈங்கில்லை போலும் - என
செப்பிய மொழிகளை சேரன் கேட்டு வஞ்சினம்
உரைத்து, வெற்றி கண்டான்.

கனக, விஜயன் பேசிய பேச்சை சேரன் செங்குட்டுவன் கேட்கிறான். உடனே போர் முழக்கம் செய்கிறான். தமிழ் மன்னர்களை இகழ்ந்த அவர்களை மண்டியிடச் செய்து அவர்களது தலையில் இமயத்திலே எடுக்கும் கல்லை தூக்கி வைத்து அந்தக் கல்லைக் கொண்டுவந்து கண்ணகிக்கு சிலை வடிப்பேன் என்று சொன்னான். சொன்னவாறே படை கொண்டு சென்றான். குயிலாலுவம் என்ற இடத்திலே கனக விசயனை போரிலே வென்றான். சிறை பிடித்தான். அவர்கள் துறவிகளாக மாறி ஓட எண்ணினார்கள். ஆபத்து நேரத்திலே ஓடுவதற்கு துணையாக இருக்கின்ற உடை அதுதானே! எனவே அந்த உடையுடன் ஓட எண்ணினார்கள். இருந்தாலும் அவர்கள் சிறை பிடிக்கப்பட்டார்கள். அவர்கள் தலையிலே கல் ஏற்றி அவர்களை தமிழகத்துக்கு கொண்டுவந்து அந்தக் கல்லைக்கொண்டு கண்ணகிக்கு சிலை வடித்தான் சேரன் செங்குட்டுவன் என்றால்,

"சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற அந்தக் குறளுக்கு ஏற்ப சொல்லியவண்ணம் செய்து காட்டிய பெருமை தமிழ் வீரன் சேரன் செங்குட்டுவனுக்கு உண்டு என்பதை எடுத்துக் கர்ட்டுகின்ற குறள்தான் இந்தக் குறளாகும்.

இந்தச் சொல்லின் பெருமையை விளக்குகின்ற இடத்திலே வள்ளுவன் இன்னொரு குறளை குறிப்பிடுகிறான்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

வலிமையான, இனிமையான சொற்களை சொல்லக் கூடியவர்கள் இருந்தால் யாரும் வெல்ல முடியாத சொற்களை சொல்லக் கூடியவர்கள் இருந்தால் அவர்களுடைய ஏவலை விரைந்து இந்த உலகம் கேட்கும். இதற்கு வரலாற்றிலே எடுத்துக்காட்டு உண்டு.

ரோமாபுரி நாட்டு மக்களின் அன்புக்கு உரியவனாகத் திகழ்ந்த சீசர் செனட் சபைக்கு செல்கிற நேரத்தில் குத்திக் கொல்லப்படுகிறான். அவனுடைய நண்பர்களே அவனைக் குத்திக் கொல்கிறார்கள். "நீயுமா புரூட்டஸ்" என்று கேட்கின்ற அளவுக்கு துரோகத்தின் சூழ்ச்சி சீசரை கொல்கிறது. சீசர் மாண்டு மடிந்தவுடன் சீசருக்கு பக்கத்தில் நின்று ஆண்டனி பேசுகிறான். அந்தப் பேச்சு வரலாற்றில் புகழ் பெற்ற பேச்சு. இன்றைக்கும் உலகம் முழுவதுமுள்ள இளைஞர்கள் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கின்ற பேச்சு. அந்தப் பேச்சில் இழையோடிய நளினம், தந்திரம், சூழ்ச்சி அத்தனையும் அவனுக்கு அந்த நாட்டு மக்கள் கட்டுப்பட வேண்டும் என்பதாகும். சீசருக்காகப் பேசினான். சீசரை கொன்றது நியாயமா என்று கேட்டான். சீசரை வீழ்த்தியவர்கள் புரூட்டசும், காஷியசும் அல்லவா என்று மக்களிடத்திலே வினவினான். மக்கள் கொதித்தெழுந்தார்கள். அவர்களை துணை கொண்டு படை திரட்டி புரூட்டசையும், காஷியசையும் துரத்தி யடித்து வெற்றிவாகை சூடினான்.

ஆனால் அப்படி வெற்றிமாலை சூடியவன் அவனுடைய பேச்சால்

"விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்ற அளவுக்கு வெற்றி பெற்றவன், மக்களை தன் பக்கம் ஈர்த்தவன், ஈர்த்த காரணத்தால் சீசரை மாய்த்தவர்களையெல்லாம் வென்று காட்டியவன் என்ன ஆனான்?

இன்னொரு குறளுக்கு அவன் இலக்காகிறான். அந்தக் குறள் என்ன தெரியுமா?

"ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்"

அதாவது, மேலும்மேலும் உயர்ந்திட விரும்புகிறவர்கள் தம் புகழ் கெடுவதற்கான செயல்களில் ஈடுபடக் கூடாது என்று அந்தக் குறள் கூறுகிறது. ஆனால் சீசரின் உடலுக்கு அருகில் நின்று சிம்ம கர்ச்சனை புரிந்து புரூட்டசையும், காஷியசையும் தோற்கடிக்கும் அளவுக்கு, மக்கள் சக்தியைத் திரட்டி வென்று காட்டிய மாவீரன் ஆண்டனி என்ன ஆனான்? தன்னுடைய புகழ் மங்குகின்ற அளவுக்கு ஒரு காரியத்தைச் செய்தான். சீசரின் காதல் நாயகி கிளியோபாட்ராவை சீசர் இறந்த பிறகு தன்னுடைய கட்டில் நாயகியாக ஆக்கிக் கொண்டான். அதன் விளைவு அகஸ்டஸ் என்று பெயர் கொண்ட அக்டேவியா என்பவனின் படையெடுப்புக்கு எதிர் நிற்க முடியாமல் ஆண்டனி வீழ்ந்தான். அவனுடைய கட்டிலறை கதாநாயகி கிளியோபாட்ராவும் வீழ்ந்தாள். இது நான் எடுத்துக்காட்டிய இரண்டாவது குறளுக்கு பொருத்தமாக நடந்த நிகழ்ச்சியாகும்.

இந்தச் சொல், செயல் இவைகளைப் பற்றி நான் திருக்குறளையே மையமாக வைத்து கருத்துக்களை சொல்லவே விரும்புகிறேன்.

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின் கண்சோர்வு"

நாம் சொல்கின்ற சொல்லால்தான் நல்லதும் கெட்டதும் வருகின்றது என்ற காரணத்தால் அந்தச் சொல்லைக் காத்திட வேண்டும். அந்தச் சொல்லைக் காப்பாற்றுவது மிகமிக முக்கியமான ஒன்றாகும். ஏனென்றால் நல்லதும் கெட்டதும் அதனால்தான் வருகிறது. நீங்கள் எண்ணிப் பாருங்கள். ராமனும் இலக்குவனும், சீதையும் காட்டுக்குச் செல்கிறார்கள். காட்டில் ஒரு குடிலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே மான் வடிவிலே மாரீசன் வருகிறான். மானை பிடித்துத் தாருங்கள் என்று மணாள னிடத்திலே ஜானகி கேட்கிறாள். வேண்டாமென்று தடுத்தும் அவளுடைய பிடிவாதத்தைக் கண்ட இராமன் இலக்குவனை சீதைக்கு காவல் வைத்து விட்டு மானை துரத்திச் செல்கிறான். சற்று தூரம் சென்ற பிறகு இராமனும் திரும்பவில்லை; மானும் வரவில்லை. ஒரு குரல் கேட்கிறது. இராமனுடைய அம்பால் மாரீசன் வீழ்த்தப்படுகிறான். அப்படி வீழ்த்தப்படும்போது மாரீசன் தந்திரமாக "இலட்சுமணா இலட்சுமணா" என்று கத்துகிறான். உடனே சீதை "ஐயோ இராமனுக்குத்தான் ஆபத்து வந்துவிட்டது. எனவே சென்று காப்பாற்று" என்று இலட்சுமணனை கேட்டுக் கொள்கிறாள். "அண்ணனுக்கு எந்த ஆபத்தும் வராது. அண்ணி நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று இலட்சுமணன் சொல்கிறான். இருந்தாலும் அவள் கேட்கவில்லை. இலட்சுமணன் போக மறுப்பதைப் பார்த்து சீதை "ஓகோ! அண்ணன் இல்லாவிட் டால் நீ என்னிடத்திலே தவறாக நடந்து கொள்ள முடியும் என்று கருதுகிறாயா" என்று கருத்தமைந்த ஒரு சொல்லைச் சொல்கிறாள். அதன் காரணமாக இலட்சுமணன் மனம் புண்பட்டு இராமனை தேடிச் செல்கிறான். இராமனும் இல்லை; இலட்சுமணனும் இல்லை. எனவே சீதைக்கு துணை யாரும் இல்லை. இராவணன் வருகிறான் – சீதையை

கவர்ந்து செல்கிறான். இது இராமாயண கதை என்பது உங்களுக்குத் தெரியும். இதைத்தான் வள்ளுவன் இராமாயணத்துக்கு முன்போ, பின்போ பாடியிருக்கிறான்.

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின் கண்சோர்வு"

நாம் சொல்கின்ற சொல்லால்தான் நல்லதும் கெட்டதும் வருகிற தென்ற காரணத்தால் அந்தச் சொல்லை நாம் எப்படிச் சொல்வது என்பதை காத்து அதன்படி அந்தச் சொல்லைச் சொல்ல வேண்டும் என்றான். எனவே அதைப் பற்றிக் கவலைப்படாமல் இலட்சுமணனை நிந்தித்ததன் காரணமாக சீதை அசோக வனத்திற்குச் செல்ல நேரிட்டது. பாவம்; சீதை இந்தக் குறளைப் படித்திருக்க முடியாதல்லவா?

சொல்லைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இதிகாசங்கள் எழுதப் பட்டுள்ளன. புராணங்கள் எழுதப்பட்டுள்ளன. இலக்கியங்கள் தீட்டப் பட்டுள்ளன. அரிச்சந்திரன் எதற்காக நாடு துறந்தான்? மனைவியைக்கூட துறக்க நேரிட்டது. மகனை இழக்க ஏன் நேரிட்டது? ஒரு சொல்தான் காரணம். அதைத்தான் விசுவாமித்திரன் கேட்டான். அவனுடைய சீடன் நட்சத்திரய்யன் என்ன கேட்டான்? "நீ தரவேண்டிய பணத்தை தர வேண்டியதில்லை என்று ஒரு சொல் சொல். போதும்" என்றுதான் கேட்டான். சொன்னானா? "நான் பொய் சொல்லமாட்டேன். நான் தரவேண்டியது உண்மைதான். தரவேண்டியதில்லை என்று நான் சொன்னால் நீங்கள் விட்டுவிடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். என் நாடு கிடைக்கும். என் மனைவி கிடைப்பாள். என் மகனும் கிடைப்பான். இழந்த சுகம் அத்தனையும் கிடைக்கும். இருந்தாலும்கூட என்னுடைய மானம் போய்விடும். எனவே நான் சொன்ன சொல்லைக் காப்பாற்றியே தீருவேன். உங்கள் கடனை அடைத்தே தீருவேன்" என்றான் அரிச்சந்திரன்.

அதனால்தான் காந்தியடிகள் மிக ஆர்வமாகப் பார்க்கிற நாடகமாக அரிச்சந்திரா நாடகம் இருந்தது என்பார்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற ஒரு மன்னன் நாட்டை இழந்தான், மனைவியை இழக்கிறான். மகனையும் இழக்கிறான் என்கின்ற அளவிற்கு அந்தச் சொல்லுக்கு பெருமையும், சிறப்பும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் சேரலாதனுடைய கொலு மண்டபத்தில் இருபுறமும் அவனது மக்கள் செங்குட்டுவனும், இளங்கோவனும் அமர்ந்திருக்கிறார்கள். நிமித்திகன் ஒருவன் அங்கு வருகிறான். அவன் அரசனைப் பார்த்து, "மன்னர் மூத்தவன் செங்குட்டுவன் என்றாலும்கூட, என்னுடைய ஆரூடக் கணக்குப்படி, உங்களுக்குப் பிறகு இளையவன் இளங்கோவன்தான் இந்த நாட்டை ஆளப் போகிறான்" என்று சொல்லுகிறான். உடனடியாக இளங்கோவன் எழுந்து, அதை மறுக்கிறான். "உன்னுடைய கூற்றை பொய்யாக்கிக் காட்டுகிறேன்" என்று சொல்கிறான். "முடியாது இளங்கோவா, இது தெய்வீக ஆரூடம். இதை உன்னால் பொய்யாக்கிக்காட்ட முடியாது"

என்று நிமித்திகன் அறைகூவல் விடுக்கிறான். "அந்தச் சொல்லை பொய்யாக்கிக் காட்டுகிறேன் பார்" என்று சொல்லி இளங்கோவன் துறவி ஆகிறான். அதனால் நமக்குக் கிடைத்தது சிலப்பதிகாரம். அவன் எண்ணியிருந்தால், ஆரூடக்காரனே அப்படிச் சொல்லுகிறானே என்று அரசாள வந்திருக்க முடியும். ஆனால் அப்படி எண்ணவில்லை. சொல்லைக் காப்பாற்றினான். ஆரூடத்தை பொய்யாக்கிக் காட்டுகிறேன் என்று அன்றைக்கே ஒரு இளங்கோவன் – சிலப்பதிகார காலத்தில் இருந் திருக்கிறான்.

எனவே அவனுடைய சொல் காப்பாற்றப்பட்ட சொல்லாக, யாரையும் ஏமாற்றாத சொல்லாக இருந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

முன்னர் சொன்னது எல்லாம் சொன்ன சொல்லைக் காப்பாற்றியவர்கள். பண்பாட்டிற்கு பெருமை சேர்த்தவர்கள். ஆனால் அர்ச்சுனன் அப்படி அல்ல. அவன் தாய் சொல்லைத் தட்டாதவன். ஒரு சுயம்வரத்திற்கு அர்ச்சுனன் பாஞ்சால நாட்டிற்குச் செல்கிறான். சுயம்வரம் என்ன வென்றால், கீழே ஒரு தட்டில் தண்ணீர் ஊற்றப்பட்டிருக்கும். மேலே ஒரு மச்சம் சுழன்று கொண்டே இருக்கும். தண்ணீர் ஊற்றப்பட்ட தட்டை உற்றுப் பார்த்துக் கொண்டு, மச்சத்தை கீழே தண்ணீரில் பார்த்துக் கொண்டு அதுவும் சுழலுகின்ற, எந்திரத்தில் உள்ள அந்த மச்சத்தை அடித்து வீழ்த்த வேண்டும். அப்படி அதை யார் அடித்து வீழ்த்துகிறார் களோ அவர்களுக்கு பாஞ்சாலியைத் தருகிறேன் என்கிறான் மன்னன்.

யாராலும் முடியவில்லை. அர்ச்சுனன்தான் அந்தக் காரியத்தை செய்து முடிக்கிறான். சுயம்வரத்திலே வெல்லுகிறான். பாஞ்சாலியை அவனிடத்திலே ஒப்படைக்கிறார்கள். அவளை அழைத்துக்கொண்டு அன்னையிடம் வருகிறான். அன்னையே 'கன்னி' ஒன்று கொண்டு வந்திருக்கிறேன் என்கிறான். அது அவள் காதில் 'கனி' என்று விழுந்ததாம். ஆகவே "ஐவரும் பகிர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்" என்கிறாளாம் தாய். மகாபாரதம் வட மொழியில் எழுதப்பட்டது. அதில் கன்னி என்று எங்கே சொன்னான்; கனி என்று எங்கே சொன்னான் என்பதெல்லாம் வேறு கதை! இருந்தாலும் ஐவரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று சொன்னாளாம். அவனது தாய். அதற்கு மறுபரீசிலனை செய்யுங்கள் அம்மா என்று அர்ச்சுனன் சொல்லக் கூடாதா? (பலத்த கைதட்டல்) பாரதப் பண்பாடு காப்பாற்றப்பட்டிருக்குமே! தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒன்றும் ஊறு வந்துவிடவில்லை. எனினும் அன்னையின் சொல்படியே ஐவரும் பகிர்ந்துகொண்டார்கள். இது பண்பாட்டைக் குலைக்கின்ற ஒரு சொல்லைக் காப்பாற்றிய நிகழ்ச்சிக்கு உதாரணமாகும்.

இன்னொன்று மகாபாரதத்தில் பீஷ்மன். அவன் தந்தை சந்தனு மகாராஜா. அவர் மச்சகந்தி என்ற ஒரு பெண்ணை காதலிக்கிறார். தந்தை அந்தப் பெண்ணை திருமணம் செய்துகொள்ள விரும்புகிறார் என்றதும்

மகனாகிய பீஷ்மனே சென்று மச்சகந்தியின் தகப்பனிடத்தில் "உன்னுடைய பெண்ணை என் தந்தைக்குக் கொடு" என்று கேட்டு வற்புறுத்துகிறான். மன்னன் மகனல்லவா! எனவே அதிகாரத்திற்கு பயந்து அந்தத் தந்தையும் ஒரு நிபந்தனை போடுகிறான். "பெண்ணைத் தருகிறேன். ஆனால் இந்தப் பெண்ணுக்குப் பிறக்கின்ற பிள்ளை, பேரன் அவர்களெல்லாம் சந்தனு மகாராஜாவுடைய சாம்ராஜ்யத்திற்கு வாரிசுகளாக வர வேண்டும். நீயோ உன்னுடைய பிள்ளைகளோ வரக் கூடாது" என்று சொல்கிறார்கள். பீஷ்மன் அதை ஏற்றுக் கொள்கிறான். பிறகு அந்தப் பெண்ணை தந்தைக்கு மணம் செய்து வைக்கிறான். அந்த நிபந்தனையை மீறக்கூடாது. சொன்ன சொல்லிலிருந்து மாறக் கூடாது என்று பீஷ்மர் பிரம்மச்சாரியாகவே இருந்து சாகிறார். அதுதான் பீஷ்மாச்சாரியார். அதாவது ஒரு ஆடவப் பெருமகனின் பெயர்!

இப்படி சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதற்காக தன்னையே தியாகம் செய்துகொண்ட அரிச்சந்திரனைப் போன்றவர்கள், இளங்கோவடிகளைப் போன்றவர்கள், பீஷ்மரைப் போன்றவர்கள் இலக்கியங்களிலும், இதிகாசத்திலும் இருந்திருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இவைகளையெல்லாம் குறிப்பிட்டேன்.

அதாவது கடுகளவு செயல், கடலளவு சொல்லைவிடச் சிறந்தது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். செயல்தான் முக்கியம். சொல் அதை ஊக்குவிக்க, உற்சாகப்படுத்த உதவக்கூடிய ஒரு படைக்கலனாக இருக்கலாம். காந்தியடிகள் ஒரு கருத்தைச் சொன்னார்.

'ஒருவரை திருப்தி செய்வதற்காகவோ அல்லது ஒருவர் கொடுக்கின்ற தொந்தரவை தவிர்ப்பதற்காகவோ சரி என்று சொல்வதை விட உளமார்ந்த உறுதியுடன் முடியாது என்ற உண்மையைச் சொல்வதே உயர்ந்தது ; சிறந்தது' என்கிறார் காந்தியடிகள்.

ஒரு சம்பவம் அவருடைய வாழ்க்கையில். நீதிக் கட்சியின் காவலர்களில் ஒருவராகத் திகழ்ந்தவரும், இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு முதல் நிதி அமைச்சராக பொறுப்பேற்க வேண்டும் என்று நேருவால் அழைக்கப்பட்டவருமான ஆர்.கே.சண்முகம் செட்டியார் காந்தியடிகளின் புகைப் படத்தை அவரிடத்திலேயே தந்து, 'இதில் தாங்கள் கையெழுத்திட்டுத் தாருங்கள்' என்று கேட்டாராம். காந்தியடிகளின் கையெழுத்தை அவ்வளவு சிறப்பாகக் கருதி அந்தப் படத்தை அவரிடம் நீட்டினார். அதற்கு காந்தியடிகள்- 'கையெழுத்திட்டால் என்ன தருவீர்கள்? இதற்கு எவ்வளவு விலை தெரியுமா?' என்றார்.

உடனே ஆர்.கே.சண்முகம் 'என்ன விலையானாலும் தருகிறேன்' என்றார். காந்தியடிகள் திரும்பச் சொன்னார். 'பணம் வேண்டாம். ஒரு வாக்குறுதி கொடுங்கள்' போதும் என்றார். என்ன வாக்குறுதி என்று ஆர்.கே.சண்முகம் காந்தியடிகளை கேட்டார். பெரிதாக ஒன்றுமில்லை. ஒவ்வொரு நாளும் நீங்கள் ஒரு அரை மணி நேரம் ராட்டையில் நூல் நூற்க வேண்டும் என்றார். கலபமான வேலைதான். சரி என்று சொல்லி விட்டு கையெழுத்து வாங்கி விட்டுப் போயிருக்கலாம். ஆனால் நேர்மையான

மனிதர்- ஆர்.கே.சண்முகம். நீதிக்கட்சியில் இருந்தவர்களெல்லாம் அப்படித்தான். எனவே அவர் சொன்னார்.

அது என்னால் முடியாது என்று சொல்லிவிட்டு காந்தியடிகளின் முகத்தைப் பார்த்தார். அவர் மலர்ந்த முகமாகவே ஆர்.கே.சண்முகம் செட்டியாரைப் பார்த்து, 'ஏன் முகம் வாட்டமாகத் தெரிகிறதே' என்றார். இல்லை. நீங்கள் சொன்னதை என்னால் செய்ய முடியாது என்று சொல்லி விட்டேனே, அதற்காக நீங்கள் வருத்தப்படுவீர்களோ என்றுதான் கவலைப்படுகிறேன் என்றாராம்.

உடனே காந்தியடிகள், "உங்களை நான் பாராட்டுகிறேன். உங்கள் நேர்மையை நான் பாராட்டுகிறேன். முடியும் என்று சொல்லிவிட்டு நீங்கள் செய்யாமல் இருப்பதைவிட தொடக்கத்திலேயே என்னால் முடியாது என்று சொல்லிவிட்டீர்களே அதற்காக நான் பாராட்டுகிறேன்" என்றாராம். எனவே சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதாக இருந்தால் அந்தச் சொல்லை சொல்ல வேண்டுமேயல்லாமல், காப்பாற்ற முடியாத சொல்லை பயன்படுத்தத் தேவையில்லை என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இப்படிசொன்ன சொல்லை காப்பாற்றாத காரணத்தால் சமுதாயத் திற்கு, நாட்டிற்கு நன்மை நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் உண்டு. தந்தை பெரியார் காங்கிரஸ் இயக்கத்திலே இருக்கிறார். அப்போது நீதிக்கட்சி ஆட்சி வகுப்புவாரி உரிமையை அறிமுகப்படுத்தி, உயர்ஜாதி மக்களுக்கு மாத்திரம் கிடைத்த உரிமைகள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களாகிய இஸ்லாமிய, கிறித்தவ மக்களுக்கெல்லாம் கிடைப்பதற்கு வகுப்புவாரி உரிமை என்கின்ற ஒரு கோட்பாட்டை கொண்டு வந்து அதை நிறைவேற்றிக் கொண்டிருந்த கால கட்டம். அப்போது தந்தை பெரியார் போன்றவர்கள் காங்கிரசிற்குள்ளேயே 'இந்த வகுப்புவாரி உரிமையை நாம் ஆதரிக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் குறிப்பாக பிராமணர் அல்லாத மக்கள் அவர்கள் படிப்பிலும், பதவிகளிலும் வருவதற்கு, பெருமளவு இடம் பெறுவதற்கு இதை நாம் ஆதரிக்க வேண்டும். காங்கிரஸ் மாநாட்டிலும் அதை வலியுறுத்தி தீர்மானம் போட வேண்டும்' என்று கூறுகிறார்.

இரண்டு மூன்று மாநாடுகளில் ராஜாஜியே பெரியாரோடு பேசி, தஞ்சை மாநாட்டில் தீர்மானம் போடுவதாகக் கூறியும் போடவில்லை. சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை. என் நினைவு; திருவண்ணாமலையில் நடந்த மாநாட்டிலும் அந்தத் தீர்மானம் போட்வில்லை. சொன்ன சொல்லை காப்பாற்றவில்லை. பிறகு காஞ்சிபுரத்தில் அந்தத் தீர்மானத்தை பெரியாரே கொண்டு வந்தபோது, மணவழகர் மன்றத்திற்கு பெயர் வைத்திருக்கிறோமே, அந்தப் பெயருக்குச் சொந்தக்காரர் திரு.வி.க தலைமையில்தான் அந்த மாநாடு நடைபெற்றது. திரு.வி.க அவர்களே அதை ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை. அப்போதுதான் பெரியார் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்காக வாதாடுகின்ற ஒரு தீர்மானத்தை காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால்

நான் இந்தக் கட்சியை விட்டு வெளியேறுகிறேன் என்று வெளியேறி னாரே; அப்போது சொன்ன சொல் காப்பாற்றப்பட்டிருந்தால் நமக்கு ஒரு பெரியார் கிடைத்திருப்பாரா? வகுப்புவாரி உரிமை வந்திருக்குமா? சமூகநீதி கிடைத்திருக்குமா?

இன்று தமிழ்நாடு மாத்திரம்அல்லாமல் இந்தியா முழுமையும் சமூகநீதி பற்றிப் பேசவும், சமூக நீதிக்காவலராக வி.பி.சிங்கைப்பற்றி பேசவுமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்குமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவேதான் நன்மையிலும் தீமை உண்டு. இதுபோன்ற தீமைகளிலும் நன்மை உண்டு என்பதற்கு உதாரணமாக நான் இதை எடுத்துக் காட்டினேன்.

சொன்ன சொல்லைக் காப்பாற்றாமல் தீங்கு விளைவித்த நிகழ்ச்சி களுக்கு ஒன்றிரண்டைச் சொல்ல வேண்டுமானால் அதை நீங்கள் தற்கால நிலைக்கு ஒப்பிட்டுக் கொள்வீர்கள் என்ற அந்த ஆர்வத்தோடு சொல்ல விரும்புகிறேன்.

புலி ஒன்று காலில் முள் தைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்ததாம். அப்போது அந்த வழியில் ஒரு வைதீகப் பெரியவர் வந்தார். புலி அவரைப் பார்த்து 'அய்யா, இந்த முள்ளை எடுத்து விடுங்கள் 'என்றதாம். அவர் சொன்னார். 'முள்ளை எடுத்து விட்டால் பிறகு என் மீது பாய்ந்து என்னை சாப்பிட்டு விடுவாய். முடியாது' என்றாராம். உடனே புலி ஒரு தங்கக்காப்பை காட்டி, 'நீ இந்த முள்ளை எடுத்து என்னைக் காப்பாற்றினால் இந்த தங்கக் காப்பை பரிசாகத் தருவேன்' என்றதாம். உடனே வைதீகருக்கு தங்கக் காப்பு என்றதும் ஆசை வந்து விட்டது.

எனவே அவர் புலியின் காலில் இருந்த முள்ளை எடுத்து விட்டாராம். புலி அவர் மீது தன் வழக்கப்படி பாய முனைந்து அவரை வாயில் கவ்வியது. அப்போது கவ்வப்பட்டிருந்த பெரியவர் புலியைப் பார்த்துக் கேட்டார். 'முள்ளை எடுத்து விட்டால் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன் என்று சொன்னாயே, இப்போது என்னை விழுங்கப் போகிறாயே' என்று கண்ணீர் விட்டார். புலி சொன்னது, 'நீ எனக்காகவா முள்ளை எடுத்தாய். என்னுடைய தங்கக் காப்புக்காகத்தானே முள்ளை எடுத்தாய்' என்று சொல்லி தன்னுடைய வேலையை முடித்துக் கொண்டு சென்று விட்டதாம். ஆகவே தங்கக் காப்புக்கு ஆசைப்பட்டு புலியின் சொல்லை நம்பிய காரணத்தால் ஏற்பட்ட விபத்து, (பலத்த கைதட்டல்) நான் காட்டுப் புலியைச் சொல்கிறேன். வீண் வம்புக்கு என்னை ஆளாக்காதீர்கள் (பலத்த சிரிப்பு) புலியின் கதை, இந்தப் புலிகளெல்லாம் வருவதற்கு முன்பு பள்ளிக்கூடத்துச் சிறுவர் களுக்காக எழுதப்பட்ட கதை. அதைத்தான் சொல்கிறேன்.

இன்னொன்று, நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் பழையனூர் நீலி கதை. பழையனூர் நீலி அதைப் பற்றிய ஒரு வழக்கு பழையனூர் பஞ்சாயத் துக்கு வருகிறது. இது பழங்காலத்துக் கதை. இது இன்றைக்கும் அந்த வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிற கதை. அந்த பழையனூர் நீலிக் கதையில் பழையனூர் நீலியின் கணவன் பஞ்சாயத்து தலைவரிடத்தில்

முறையிடுகிறான். "இந்த நீலியின் கொடுமையை பொறுக்க முடியவில்லை. ஒவ்வொரு நாளும் தொல்லை தாங்க முடியவில்லை. வீட்டில் குடும்பம் நடத்த முடியவில்லை. எனவே என்னை அவளிடமிருந்து விடுவித்து விவாகரத்து கொடுத்துவிடுங்கள்" என்று கேட்கிறான்.

ஆனால் அவள் சொல்கிறாள்; 'என் கணவர் என்னைப்பற்றி வேண்டுமென்றே 'சொல்கிறார். என்னைப்போல் பத்தினி இங்கு யாரும் இல்லை. காலை முதல் மறுநாள் காலை வரை கணவனுக்கு பணிவிடை செய்வதையே நான் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறேன். என்னுடைய அழகுக்கும், கவர்ச்சிக்கும் இந்த ஊரில் உள்ள ஆண் மக்கள் எத்தனையோ பேர் என் காலில்கூட வந்து விழுகிறார்கள். நான் யாரையும் சட்டை செய்யவில்லை. என் கணவருக்காகத்தான் உயிர் வாழ்ந்து கொண்டி ருக்கிறேன். எனவே அவர் சொல்வதை நம்பாதீர்கள். என்னை அவருடனே வாழவிடுங்கள்' என்கிறாள். பஞ்சாயத்து நடத்தும் பெரியவருக்கும் கொஞ்சம் சபலம். அவரும் அந்தப் பெண்ணின் பேச்சைக் கேட்டு, 'சரி ஒழுங்காகப் போய் வாழுங்கள்' என்று சொல்லி கணவன் தொடுத்த வழக்கை தள்ளுபடி செய்துவிட்டு – வீட்டிற்கு அனுப்பி வைக்கிறார்கள்.

மறுநாள் காலையில் ஊரெல்லாம் ஒரே அமளி, என்னவென்றால் அந்தப் பெண்ணின் வீட்டில் கணவன் ரத்தம் கக்கி இறந்து கிடக்கிறான். அவளைக் காணவில்லை. என்னவென்றால் அவள் பெண் அல்ல, நீலி என்கின்ற ஒரு பேய். அந்த பேய்க்கு வாழ்க்கைப்பட்டு, இவன் கதையை தீர்த்துக் கட்டிவிட்டது. இதைக் கேள்விப்பட்ட அந்தப் பஞ்சாயத்தார் அத்தனை பேரும், நாம் வழங்கிய தவறான தீர்ப்பால் – (பலத்த கைதட்டல் – ஆரவாரம்) கோகலே ஹால் கூட்டம் என்றால் கோகலேஹால் கூட்டம்தான். பெரியார், அண்ணா, ராஜாஜி போன்றவர்கள் எல்லாம் பேசிய இடமல்லவா இது. எனவே எதையும் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் நீங்கள் (பலத்த கைதட்டல்- ஆரவாரம்) எனவே நாமெல்லாம் அளித்த தவறான தீர்ப்பால் அல்லவா அந்தப் பழையனூர் நீலி என்கின்ற பேய் அவனின் உயிரை உறிஞ்சி விட்டது என்று அத்தனை பேரும் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று ஒரு பழைய கதை சொல்லப்படுகிறது.

இதை வைத்துத்தான்போலும் திருவள்ளுவர் அன்றைக்கே சொல்லியிருக்கிறார்

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

செயல் வேறு, சொல் வேறு என்பவர்களுடைய தொடர்பை கனவிலேகூட நினைக்காதே.

இங்கே நன்னன் சொன்னாரே, சொல் வேறு, செயல் வேறு என்பவரின் தொடர்பால் கழனியிலே களை மிகுந்தது. மண் வளம் போயிற்று. பண்பாடு பாழாயிற்று என்றெல்லாம் கொதித்து குமுறினாரே அப்படி

குமுற வேண்டிய சூழ்நிலை எப்போது ஏற்படுகிறது? சொல் வேறு, செயல் வேறு என்பவர்களிடத்தில் ஏற்பட்ட தொடர்பால் அல்லவா இது. ஏற்பட்டு விடுகிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

'சொல்லும் செயலும்' என்ற சொற்றொடரை தலைப்பாக ஆக்கி பேசுகிற நேரத்தில் 'சொல்லும் செயலும்' என்பதை அரசியல் ரீதியாகப் பார்த்தால் தேர்தல் வாக்குறுதியிலே போய் நிற்கும். ஆன்மீக ரீதியாகப் பார்த்தால் உபதேசி ஒருவன் பொது மக்களைக் கூட்டி வைத்து எல்லோரும் சைவர்களாக இருங்கள், எல்லோரும் துறவறம் மேற்கொள்ளுங்கள் என்று கூறி விட்டு வீட்டுக்கு வந்தவுடன் 'என்ன சமையல்' என்று கேட்க, மனைவி, 'அருமையான கத்திரிக்காய் சாம்பார்' என்று சொல்ல, 'ஏன் ஆட்டுக்கறி கிடையாதா?' என்று கேட்க 'உங்கள் பேச்சை நானும் கேட்டேன். அதனால் தான் சைவ சமையல்' என்று அவள் கூற, 'அடிப்பாவி ஊருக்கல்லவா சொன்னேன், உனக்கும் எனக்குமா சொன்னேன்' என்று சொன்னானே அந்த ஆன்மீகவாதிகள், பிரேமானந்தாக்கள். சொல்-செயல் இவைகளால் வேறுபட்டவர்கள்.

மதத்துறையிலே எடுத்துக் கொண்டால் மதச் சார்பற்ற நாடு என்று இந்த நாட்டுக்குப் பெயர். இருந்தாலும் சொல் கரசேவையாய் இருக்கும்; செயல் பாபர் மசூதியை இடிக்கும். அதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

தமிழிலே சொற்களின் கூட்டம் எப்படியெல்லாம் நர்த்தனமாடும், விளையாடும் என்பதற்கு இரண்டு மூன்று எடுத்துக் காட்டுகளைக் கூற விரும்புகிறேன்.

வல்லினம், மெல்லினம், இடையினம் என்று கூறுகிறோம் இந்த சொற்களைக்கூட ஒரு சொல்லோவியமாக வாக்கியமாக அமைக்கின்ற நேரத்தில் நானே உருவாக்கிய வசன நடையில் பார்த்தாலேகூட மென்மையானதாக வசனங்கள், மென்மைக்கும் வன்மைக்கும் இடையிலே உள்ள இடைப்பட்டதான வசனங்கள், வன்மை மிகுந்ததான வசனங்கள்.

'அலை அலையாய்ச் சுருண்டு கிடக்கும் உன் கரிய கூந்தலும், அழகேறி நிற்கும் உன் அரும்புப் புருவங்களும், அம்பினும் கூர்மையான உன் கண்களும் என் நெஞ்சிலே உணர்ச்சி வெறியேற்றிய உன் நீண்ட மூக்கும் ரத்தத்தைவிட சிவப்பான உன் ரத்தின அதரங்களும் மனிதனை மயக்குவதற்கு என்றே மாயனால் படைக்கப்பட்ட உன் மாம்பழ மேனியும்...'

இது இனிமையான, மென்மையான உரையாடல் மந்திரகுமாரி படத்தில்!

"பொன்னும் மணியும்,
மின்னும் வைரமும்
பூட்டி மகிழ்ந்து
கண்ணே முத்தே
தமிழ்ப் பண்ணே
என்றெல்லாம் குலவிக் கொஞ்சி
தந்தத்தால் ஆன கட்டிலிலே
சந்தனத் தொட்டிலிலே
வீரனே என் விழி நிறைந்தவனே

பல்கலைப் புலவர்,
தமிழ்த் "கா.சு" நினைவு இலக்கியக் குழு
ஈகுவரவடிவுஅகம் - சுழித்தலை
திருச்சி மாவட்டம். 639 104.

தீரர் வழி வந்தவனே

என்று யாரை சீராட்டி பாராட்டினீர்களோ, அவனை,
அந்த மனோகரனை

சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி,

சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்ற. உங்கள் தணியாத

ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?"

இது மென்மைக்கும் வன்மைக்கும் இடைப்பட்ட வசனம், மனோகராவில்!


மற்றொன்று,

"வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலில் பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும் வீரர்களின் மண்டை ஓடுகளை முத்தமிட்டபடி பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும், அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகாரி பாடாமல் முதுகு காட்டாமல், முகம் சுளிக்காமல் எந்த நேரத்தில் எந்தப் பக்கம் இருந்து ஈட்டி பாயுமோ, கணை பாயுமோ என்று சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பதும் வீரர்களுக்கு அழகில்லை என்ற போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும் மறந்துவிடாமல்; மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு, மங்கையின் இதழைவிடச் சுவையானது என்ற மனோபலத்தோடு படையை நடத்திச் செல்பவனே பராக்கிரமசாலி- பைந்தமிழன் என்ற பாராட்டுக்குரியவன்தான் நான்.

எனவே சாவுக்கு அஞ்சமாட்டேன். ஆனால் காரணமில்லாமல் சாகமாட்டேன்"

இது வன்மை மிகுந்த வசனம். 'ஜெனோவா' படத்தில்!

இந்த மூன்றும் சொற்கூட்டத்தால் விளைந்ததுதான்; தமிழ்ச் சொற்கூட்டத்தால். அந்த தமிழ் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன் இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.



திரு.வி.க

வெளியீடு : தி.மு.க. இளைஞர் அணி
அச்சிட்டோர் : கலையகம் அச்சகம், சென்னை – 600 034.